
ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

## ஸ்ரீயதுகிரி நாச்சியார், ஸ்ரீஆண்டாள் மற்றும் ஸ்ரீகந்தாடைத்தோழப்பர் வருஷத்திருநட்சத்திரம் - ஆடி - பூரம்



ஸ்ரீயதுகிரி நாச்சியார், மேல்கோட்டை

### தனியன்

நாராயணஸ்ய மஹிஷீம் யாதவாத்ரி நிவாஸ நீம் /
கர்ககடே பூர்வபல்குந்யாம் ஸஞ்ஜாதாம் ஸ்ரீயமாஸ்ரயே //

நாராயணகுரோ: பத்நீம் தத்பாத கமாலஸ்ரீதாம் /
ஸர்வ ஸம்பத ஸம்யுக்தாம் நீளாதேவீம் ஸமாஸ்ரயே //



திருவரங்கச்செல்வனாரும் ஸ்ரீஆண்டாளும்



ஸ்ரீஆண்டாள், ஆழ்வார் திருநகரி (இந்த ஸந்நதியை கட்டியவர் ஆத்தான் ஸ்ரீஉ.வே.வேங்கடாச்சார்யர் ஸ்வாமி) - புகைப்பட உதவி – ஆத்தான் ஸ்ரீஉ.வே.ஸுதர்சனராமாநுஜாசாரியார் ஸ்வாமி

## தனியன்

கர்க்கடே பூர்வபல்குந்யாம் துளஸீ காநநோத்பவாம் /
பாண்ட்யே விஸ்வம்பராம் கோதாம் வந்தே ஶ்ரீரங்கநாயகீம் //

தேவஸ்ய மஹிஷீம் திவ்யாம் ஆதௌ கோதாமுபாஸ்மஹே /
யந்மௌலிமாலிகாம் ப்ரீத்யா ஸ்வீகரோதி ஸ்வயம் ப்ரபு: //

## நாள் பாட்டு - உபதேசரத்தினமாலை

இன்றோ திருவாடிப்பூரம் . எமக்காக
வன்றோ இங்காண்டாளவதரித்தாள் - குன்றாத
வாழ்வான வைகுந்தவான் போகந்தன்னையிகழ்ந்து
ஆழ்வார் திருமகளாராய். (22)

பெரியாழ்வார் பெண்பிள்ளையாய் . ஆண்டாள் பிறந்த
திருவாடிப்பூரத்தின் சீர்மை - ஒருநாளைக்
குண்டோமனமே யுணர்ந்துபார் . ஆண்டாளுக்
குண்டாகிலொப் பிதற்குமுண்டு. (23)

அஞ்சுகுடிக் கொருசந்ததியாய் . ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்ப் - பிஞ்சாய்ப்
பழுத்தாளை யாண்டாளைப் பத்தியுடன்நாளும்
வழுத்தாய் மனமேமகிழ்ந்து. (24)

## வாழித்திருநாமம்

திருவாடிப் பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒருநூற்று நாற்பத்து மூன்னுரைத்தாள் வாழியே
உயரரங்கர்க்கே கண்ணி யுகந்தளித்தாள் வாழியே
மருவாருந் திருமல்லி வளநாடி வாழியே
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே.

## ஸ்ரீ பராசர பட்டர் அருளிய திருப்பாவை தனியன்

நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ஸ்ருதிஸதஸிரஸ்ஸித்தமத்யா பயந்தீ /
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாளஸ்து பூய: //

## திருப்பாவை தனியன் - உய்யக்கொண்டார் அருளிச்செய்தது

அன்னவயற் புதுவை யாண்டாள். அரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம் - இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பமாலை. பூமாலை
சூடிக்கொடுத்தாளைச் சொல்லு.

சூடிக் கொடுத்த சுடர்கொடியே!. தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய்! - நாடிநீ
வேங்கடவற் கென்னை விதியென்ற விம்மாற்றம்
நாம் கடவா வண்ணமே நல்கு.

## திருக்கண்ணமங்கையாண்டான் அருளியுள்ள நாச்சியார் திருமொழி தனியன்

அல்லிநாட் டாமரைமே லாரணங்கினின் துணைவி
மல்லிநாடாண்ட மடமயில் - மெல்லியலாள்
ஆயர் குலவேந்தனாகத்தாள். தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு.

## ஒன்றான வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி (பொன்னடிக்கால் ஜீயர் ஸ்வாமி) அருளியுள்ள நாச்சியார் திருமொழி தனியன்

கோலச்சுரிசங்கைமாயன் செவ்வாயின் குணம் வினவும்
சீலத்தனள். தென் வருமல்லிநாடி. செழுங்குழல்மேல்
மாலைத் தொடை தென்னரங்கருக்கீயும் மதிப்புடைய
சோலைக்கிளி. அவள் தூயநற்பாதம் துணைநமக்கே.

இந்தத் தனியன் வானமாமலை முதலான தென்திவ்யதேசப் ப்ராந்தியங்களில்
அநுஸந்திக்கப்படுகிறது.

## ஆண்டாளை புகழ்ந்துரைக்கும் இராமானுஜநூற்றந்தாதி 16ஆம் பாசுரம்

தாழ்வொன்னில்லா மறைதாழ்ந்து. தலமுழுதும்கலியே
ஆள்கின்ற நாள் வந்தளித்தவன் காண்மின். அரங்கர்மௌலி
சூழ்கின்ற மாலையைச் சூடிக்கொடுத்தவள் தொல்லருளால்
வாழ்கின்ற வள்ளல் இராமாநுஜனென்னும் மாமுனியே.

தேவஸ்ய மஹிஷீம் திவ்யாம் ஆதௌ கோதாமுபாஸ்மஹே /
யந்மௌலிமாலிகாம் ப்ரீத்யா ஸ்வீகரோதி ஸ்வயம் ப்ரபு: //

இந்த ஸ்லோகத்தின் பொருள் : எவள் சூடிக்களைந்த மாலையை ஸர்வேஸ்வரனே உகப்புடன் ஏற்றுக்கொண்டானே, விஷ்ணுவின் திவ்ய மஹிஷியான அத்தகைய கோதையை முதலிலே உபாஸிக்கிறோம்.

ஸ்ரீஆண்டாளின் அவதாரஸ்தலம் - ஸ்ரீவில்லிபுத்தூர்
ஆசாரியர் - பெரியாழ்வார்
திருநாமங்கள் - சூடிக்கொடுத்தாள், கோதை, ஆண்டாள் , ஆழ்வார் திருமகள்
அருளிச்செய்த ப்ரபந்தங்கள் - திருப்பாவை – 30 பாசுரங்கள்
நாச்சியார் திருமொழி – 143 பாசுரங்கள்

## ஸ்ரீஆண்டாளின் அவதார விஷேஷம்

மிதிலா நகரில் ஸ்ரீதேவியின் அவதாரமான ஸீதாதேவி ஜனகமாஹாராஜவின் தோட்டத்தில் தோன்றியது போல, ஸ்ரீவில்லிபூத்தூரில் ஆடி மாதம் பூர நஷத்திரத்தில் பூமிப்பிராட்டியின் அம்ஸமாக, பெரியாழ்வாருடைய துளஸித்தோட்டத்தில் திருத்துழாய் மண்ணின் கீழே தோன்றினாள் ஆண்டாள் என்று குருபரம்பரை நூல் கூறும்.

## உயரரங்கர்க்கே கண்ணி யுகந்தளித்தாள்

ஆண்டாள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய ப்ரபந்தங்களை அருளிச்செய்து அதில் ஏற்பட்ட பகவதனுபவங்களை நினைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தாள். அவளுக்கு விவாஹத்துக்கேற்ற பருவம் வந்ததைக்கண்டு பெரியாழ்வார் இவளுக்கேற்ற கணவனைக் காணப்பெறாமல் கவலைப்பட்டு இவளையழைத்து `நீ யாருக்கு வாழ்க்கைப்பட விரும்புகிறாய்' என்று கேட்டார். அதற்கு ஆண்டாள் `மானிடவர் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்று சொல்ல, பெரியாழ்வார் `அப்படி என்றால் என் செய்வது' என்று கேட்க கோதையும் `பெருமாளையே மணம்புரிய விரும்புகிறேன்' என்று உரைத்தாள். ஆழ்வாரும் `நூற்றெட்டுத் திருப்பதி எம்பெருமான்களில் யாருக்கு வாழ்க்கைப்பட விரும்புகிறாய்' என்று கேட்க ஆண்டாளும் `அவர்களுடைய குணங்களையும் பெருமைகளையும் சொல்லியருள வேணும்' என்று பிரார்த்தித்தாள். ஆழ்வாரும் வடபெருங்கோயிலுடையான் வைபவம் தொடக்கமாக எல்லா எம்பெருமான்களின் சீர்மைகளையும் அருளிச்செய்தார். ஆண்டாளும் அதுகேட்டு ஆனந்தக் கண்ணீர் துளிக்க மயிர்க்கூச்செறியும் மேனியுடையளாய், அரங்கத்தின்னமுதருடைய குழல்லழகு, வாய்யழகு, கண்ணழகுகளைக்கேட்டுப் பெருங்காதல் கொண்டு மோஹித்து `வந்தானோ திருவரங்கன் வாரானோ என்றென்றே வளையும் சோரும்' என்கிறபடியே மனமுருகி அணியரங்கத்தம்மானுக்கே அற்றுத்தீர்ந்த காதலையுடையவளானாள். பெரியாழ்வாரும் கோதைக்குத்தக்க மணாளன் கோயில்பிள்ளையான நம்பெருமாளே என்று அறுதியிட்டார். திருவரங்கச் செல்வன் பெரியாழ்வாரின் கனவிலே எழுந்தருளி, `உம்முடைய பெண்ணான கோதையைக் கூட்டிக்கொண்டு நம்கோயிலுக்கு வாரீர். அவளுக்குத் தகுதியாக நாமே அவளைக் கைப்பிடிக்கிறோம்' என்று அருளிச்செய்தார். இதைக்கேட்ட ஆழ்வாரும் மிகவும் உகந்து கவலையற்றிருந்தார். நம்பெருமாளால் நியமிக்கப் பெற்ற திருவரங்கத்து கைங்ர்யபரர்கள் அவருடைய குடை, சாமரம், திருவாலவட்டம் முதலிய எல்லா பரிச்சதங்களோடும் ஸ்ரீவில்லிபூத்தூருக்குச் சென்று, நம்பெருமாள் நியமனத்தை விண்ணப்பம் செய்ய, ஆழ்வாரும் மிக உகந்து ஆச்சர்யப்பட்டு, வடபெருங்கோயிலுடையானுடைய

அநுமதிகொண்டு, மணிகளிழைத்த மூடு பல்லக்கிலே ஆண்டாளை எழுந்தருள்வித்துக்கொண்டு, வாத்யகோஷங்களுடன், தொண்டர்குழாம்புடைசுழ, `ஆண்டாள் வந்தாள், சூடிக்கொடுத்தாள் வந்தாள், சுரும்பார்குழற்கோதை வந்தாள், திருப்பாவை பாடிய செல்வி வந்தாள், தென்னரங்கம் தொழும் தேசுடையாள் வந்தாள்' என்று பல திருச்சின்னங்கள் பணிமாற வந்து அழகிய மணவாளனுடைய பெரிய திருமண்டபத்தே சென்று சேர்ந்தார்கள். மூடுபல்லக்கை மூடியிருந்த தட்டுப்பாயை அகற்ற, சூடிக்கொடுத்த நாச்சியாரும் அனைவரும் காணும்படி - சிலம்பார்க்கச் சீரார்வளையொலப்ப, அன்னமென்ன நடையும் கொண்டு அழிகிய மணவாளன் திருமுன்பே சென்று உள்ளே புகுந்து, கண்களாரக்கண்டு, கேசவநம்பியைக் கால்பிடிப்பாள் என்னும் பேறுபெற்று, நாகத்தணையை மிதித்தேறி, தீ முகத்து நாகணைமேல் சேரும் திருவரங்கரைச் சேர்ந்து, எப்போதும் திருவரங்கன் திருவடி வருடாலம்படி மறைந்தருளினாள்.

## <u>ஆண்டாள் என்றும் சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் பெயர் வரக்காரணம்</u>

உலகெல்லாம் வியக்கும்படி இளமையிலேயே எம்பெருமானிடத்திலே பக்தி பெருங்காதல் கொண்டு பிஞ்சாய் பழுத்தவளாய் அவனையே மணம் செய்து கொள்ளக்கருதி எம்பெருமானது பெருமைகளையே எப்பொழுதும் நினைத்தல், துதித்தல் முதலியன செய்து நின்றாள் சுரும்பார் குழற்கோதை. தினந்தோறும் விஷ்ணு சித்தர் வடபெருங்கோயிலுடையானுக்குச் சாத்துவதற்காகக் கட்டிவைத்த திருமாலையை அவரில்லாத சமயம் பார்த்து எடுத்து தன்குழலிலே வரித்துக்கொண்டு சிறந்த ஆடை ஆபரணங்களையும் அணிந்து கொண்டு அப்பெருமானுக்கு நான் பொருந்தியிருக்கிறேனோ? இல்லையோ ? என்று தன் அழகைக் கண்ணாடியிலே கண்டு பெரியாழ்வார் வருவதற்கு முன்பே அந்த மாலையை பூக்கூடையில் நலங்காமல் வைத்து வந்தாள். இப்படி பல நாள்கள் கழிந்தபின் ஒருநாள் வெளியில் சென்ற ஆழ்வார் விரைவில் மீண்டு வந்த போது கோதை பூமாலை சூடியிருப்பதைப் பார்த்து கோபம் கொண்டு `பெண்ணே நீ செய்தகாரியம் எம்பெருமானுக்கு அபசாரமாகும். இனி அப்படிச் செய்வதற்கு நினைவும் கொள்ளாதே' என்று நங்கைக்கு நற்புத்தி சொல்லி அன்று பெருமாளுக்கு மாலை சாத்தாமல், அக்கைங்கர்த்திற்கு இடையூறு நேர்ந்தது என்று வருத்தப்பட்டார். அன்றிரவு வடபெருங்கோயிலுடையான் பெரியாழ்வார் கனவில் தோன்றி `நீர் இன்று நமக்கு மாலை கொண்டு வராதது ஏன்?' என்று கேட்க, அவர் தம் திருமகளாருடைய தவறான காரியத்தை விண்ணப்பிக்க, அதுகேட்டு அப்பெருமாள் `அவள் சூடிக்கொடித்த மாலையே நறுமணம் மிகுந்து நமக்கு மிக உகப்பாயிருக்கிறது ! ஆகையால் இனி நாள்தோறும் அவள் சூடிக்கொடுத்தமாலையை நமக்குக் கொண்டு வாரீர்' என்று அருளிச்செய்தார். உடனே கண்விழித்த பெரியாழ்வார் தாம் பெற்ற பெண்பிள்ளை எம்பெருமானுடைய தேவிகளில் ஒரத்தியின் அவதாரமே என்று அறுதியிட்டு அவளுக்கு அதுகாரணமாக ஆண்டாள் என்றும், எம்பெருமானுக்குரிய மலர்மலையைத்தான் சூடிக்கொண்டு பார்த்து பின்பு அவனுக்கு கொடுத்தது காரணமாக சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் திருநாமம் இட்டு அழைத்து வந்தார்.

## ஆழ்வார்கள் தம்செயலை விஞ்சி நிற்கும் தன்மையளள்

ஆழ்வார்கள் தாங்கள் ஸம்ஸாரத்தில் கிடந்துறங்காநிற்க, எம்பெருமான் தானாகவந்து அவர்களை உணர்த்த பிறகு உணர்ந்தனர் அவர்கள். ஆனால் ஆண்டாளோ அங்ஙனமின்றி மணத்துடன் முளைக்கும் திருத்துழாய் போன்று எம்பெருமான் திறத்து ஆராதகாதலுடன் அவதரித்தது முதல் இவள் தானே எம்பெருமான் ஸந்நிதியில் சென்று உம்பர்கோமானே ! உறங்காதெழுந்திராய் ! என்று அவனை உணர்த்தினாள். ஆதலால் ஆழ்வார்களைக்காட்டிலும் ஆண்டாளுக்கு உள்ள வைலசஷண்யம் சொல்லாற்கூறும் பரமன்று. அன்றியும் ஆடவரை ஆடவர் கண்டு காமுறுவதலைக்காட்டிலும் ஆடவரை பெண்டிற்கண்டு காமுறுதல் பள்ளமடையாய் இருக்கும் என்பது உலகத்தோர் எளிதில் உணர்ந்த விஷயம் ஆகும். பகவத் விஷயத்தில் ஆழ்வார்களின் காமம் மேட்டு மடையாய் இருக்கும். இவ்வாண்டாளுடைய காமமோ பள்ளமாடையாய் வைலசஷ்னமாக இருக்கும். ஆழ்வார்கள் காமத்தின் மெய்பாட்டுக்காக பெண்ணுடை உடுத்துப் பேசினார்கள். இவட்கு அங்ஙனம் ஆரோபித்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லையே. இதனால் ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சி நிற்கும் தன்மையாய் ஆண்டாள் உள்ளால்.

## பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள்

எம்பெருமானார் ஸ்ரீரங்கத்தில் நாச்சியார் திருமொழிக்கு வ்யாக்யானம் செய்து வந்தார். `நாறுநறும் பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு' (9 ஆம் திருமொழி 6ஆம் பாசுரம்) என்கிற பாசுரத்திற்கு வ்யாக்யானம் சொல்லும் போது `ஆண்டாள் ப்ரார்த்தனையை நாம் தலைக்கட்டவேணும்' என்று சொல்லி, அப்போதே புறப்பட்டுத் திருமாலிருஞ்சோலைமலைக்கு எழுந்தருளி, கோதை ப்ரார்த்தித்தபடியே, நூறு தடாநிறைந்த அக்காரவடிசிலும் பரிவுடனே திருமாலிருஞ்சோலை நம்பிக்கு அமுதுசெய்வித்தருளினார். பிறகு ஸ்ரீவில்லிபூத்துாருக்கு எழுந்தருளி வடபெருங்கோயிலுடையானையும் ஸேவித்து நாச்சியார் திருமாளிகைக்கு எழுந்தருளி, ஆழ்வார் திருமகளாரை அடி வணங்கி நிற்க, கோதையும் குலமுனிவனைக் குறித்துத் தம் ப்ரார்த்தனையைத் தலைக்கட்டினதற்கு மிகவும் உகந்து `நம் கோயிலண்ணர்' என்று அர்ச்சகமுகேந திருநாமம் ப்ரஸாதித்து, தீர்த்த ப்ராஸாதங்களும் ப்ராஸாதித்து விடைகொடுத்து அருளினார். அன்று முதல் ஆண்டாளுக்கு அண்ணவாக எம்பெருமானார் விளங்குகிறார். எம்பெருமானார் எப்பொழுதும் திருப்பாவையை அனுசந்தித்துக்கொண்டிருப்பார். அதனால் இவருக்கு திருப்பாவை ஜீயர் என்ற பெயரும் ஏற்பட்டது.

ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி பாசுரங்களை அனுசந்தித்தால், ச்ரியப் பதியான எம்பெருமானின் திருவருள் பெற்று இன்புற்று வாழலாம்.

## மங்களம்

ஸ்ரீமத்யை விஷ்ணுசித்தார்ய மநோநந்தநஹேதவே /
நந்தநந்தநஸு॰ந்தர்யை கோதாயை நித்யமங்களம் //

ஸ்வோச்சிஷ்ட மாலிகாபந்தகந்தபந்துர ஜிஷ்ணவே /
விஷ்ணுசித்த தநூஜாயை கோதாயை நித்தய மங்களம் //

## ஸ்ரீகந்தாடைத்தோழப்பர்

### தனியன்

கர்க்கடே பூர்வபல்குந்யாம் ஜாதம் லோகார்ய ஸம்ஸ்ரீதம் /
வந்தே வாத்ஸல்ய ஜலதிம் வராணாதீஸ தேஸிகம் //

திருவவதாரஸ்தலம் - கோயில்
திருத்தகப்பனார் - கந்தாடையாண்டான்; திருப்பாட்டனார் - முதலியாண்டான்
ஆசாரியன் - கந்தாடையாண்டான் ;
சிஷ்யர்கள் - குமாரரான பெரியாய், சிற்றாய், ஈயான், அம்மாள்

### இவரை பற்றி உரைக்கும் உபதேசரத்தினமாலை 51ஆம் பாசுரம்

துன்னு புகழ்க் கந்தாடைத் தோழப்பர் தம் உகப்பால்
என்ன உலாகாரியனோ என்றுரைக்க - பின்னை
உலகாரியன் என்னும் பேர் நம்பிள்ளைக்கு ஓங்கி
விலகாமல் நின்றதென்றும் மேல்.

இந்த பாசுரத்திற்கு காஞ்சி ஸ்ரீ **PBA** ஸ்வாமி அருளியுள்ள விளக்கவுரையை கீழே அனுபவிப்போம். நம்பிள்ளைக்கு லோகாசார்யர் என்ற பெயரை தோழப்பர் சூட்டினார்.

முதலியாண்டான் திருவம்சத்திலே தோன்றி ஆசார்யபுருஷராகப் புகழ்பெற்றிருந்த கந்தாடைத் தோழப்பரென்னும் ஸ்வாமி நம்பிள்ளை காலத்தில் கோயிலில் ஒருவீதியில் வாழ்ந்து வந்தார். அவரும் வித்வானாகவேயிருந்தும் அனைவரும் நம்பிள்ளை திருவடிகளையே ஆச்ரயித்து அர்த்தங்கள் கேட்டு வந்தார்களே யன்றி அவரிடம் ஒருவரும் வந்து பணிந்திலர். அதனால் அவர்க்கு நம்பிள்ளை மீது அஸூயை அதிகரித்து அவரைத் தூஷித்துக் கொண்டே யிருந்தார் அந்தத்தோழப்பர். இப்படியிருக்கையில் ஒருநாள் இவர்க்கு அவர்மேல் அனுதாபம் தோன்றி, நம்பிள்ளையிடம் சென்று அபராதசஷாமணம் செய்து கொள்ள வேணுமென்று ஆசையுண்டாகி அவர் புறப்படுவதாக இருக்கையில், `ஐயோ! மஹாகுலப்ரஸூதரான இந்தத் தோழப்பருடைய திருவுள்ளம் கன்றும்படி நாம் பிறந்தோமே ! அவரிடம் சென்று பொறுப்பித்துக்கொள்வோம்' என்று நினைத்து நம்பிள்ளை அதே சமயத்தில் அந்தத் தோழப்பர் திருமாளிகையில் வந்து பதுங்கி நின்றார். தோழப்பர் வெளியே எழுந்தருளும் போது அவரை நம்பிள்ளை தெண்டனிட்டு சஷமை வேண்ட, இதென்ன ஆச்சரியமான குணம்! என வியந்த கந்தாடை தோழப்பர் நம்பிள்ளையை நோக்கி `நீரென்ன லோகாசார்யரோ!' என்று ஈடுபட்டுக் கூறினார். அதுமுதலாக நம்பிள்ளைக்கு லோகாசார்யரென்கிற பெயர் ப்ரஸித்தியாயிற்று.

ஸ்ரீயதுகிரி நாச்சியார், ஸ்ரீஆண்டாள், ஸ்ரீகந்தாடைத்தோழப்பர் திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய: